# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 371/ந/2025, நாள் 30.03.2026

ச. கலியமூர்த்தி,
மன்னார்குடி, – முறையீட்டு மனுதாரர்
திருவாரூர் மாவட்டம்.

நகராட்சி ஆணையர்,
திருவாரூர் நகராட்சி, – எதிர்மனுதாரர்
திருவாரூர் மாவட்டம்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, புதுப்பாலம், நடராஜன் கீழத்தெரு, எண்.16/14 என்ற முகவரியில் வசிக்கும் திரு ச. கலியமூர்த்தி என்பவரது 01.11.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.11.2025 அன்று பெறப்பட்டு, 371/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, புதுப்பாலம், நடராஜன் கீழத்தெரு, எண்.16/14 என்ற முகவரியில் வசிக்கும் திரு ச. கலியமூர்த்தி என்பவரின் 01.11.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நான் மன்னார்குடி நகராட்சியில் தினக்கூலி பணியாளராக பணிபுரிந்து அரசாணை 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.05.1999ன் படி மன்னார்குடி நகராட்சியில் நகரமைப்பு ஆய்வராக 28.02.2001–ல் பணி அமர்த்தப்பட்டு பல்வேறு நகராட்சிகளில் பணிபுரிந்து துவாகுடி நகராட்சி ஆணையர் அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.47/2022/சி1, நாள் 29.07.2022ல் கண்டுள்ள உத்தரவின்படி 31.02.2022ல் துவாகுடி நகராட்சியிலிருந்து 52 வயதில் தன்விருப்ப ஓய்வு பெற்று இக்கடிதம் எழுதப் பெறும் 01.11.2025 வரையிலும் ஓய்வூதிய பயன்கள் கிடைக்காத நிலையில் மிகுந்த சிரம நிலையின் உள்ளேன்.

நான் பணியில் இருந்த காலகட்டத்தில், திருவாரூர் நகராட்சியில் பணிபுரிந்த காலங்களில் பல்வேறு தீவிர உடல் உபாதைகளால் பணிக்கு சரிவர செல்ல இயலாத காரணங்களினால் வெவ்வேறு காலக்கட்டங்களில் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு பின்பு பணியில் சேர அனுமதிக்கப்பட்டு பணிநீக்க காலம் தகுதியுள்ள விடுப்பாக பாவிக்கப்பட்டு வரன் முறை செய்து, பொருளில் கண்டுள்ளபடி 01.12.2020 தேதிய செயல்முறைகளின் படி உத்தரவிடப்பட்டது.

மேற்காணும் விடுப்பூதிய பணப்பலன்கள் மற்றும் நிலுவையில் உள்ள Duty Pay ஆகியவற்றை வழங்கக்கோரி திருவாரூர் நகராட்சி ஆணையர், தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை ஆகியோரிடம் நேரிலும், கடிதங்கள் வாயிலாகவும் கோரிக்கை

விடுத்தும், எந்தவித நிவாரணமும் கிடைக்கவில்லை. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ஒ.மு.1462/2025/எ1, நாள் 14.02.2025ல் கண்ட கடிதங்கள் வாயிலாக ஆணையரை விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்ட நிலையிலும் பலன் இல்லை.

இப்பொருள் தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவிற்கு மூன்று முறை மனுக்கள் அளித்துள்ள நிலையில், முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு திருவாரூர் நகராட்சி ஆணையரால் அளிக்கப்பட்ட பதில்கள் கடித ந.க.எண்.115/2024/சி1, நாள் 29.04.2024, 5.02.2025 மற்றும் கடித எண்.229/2024/சி1, நாள் 28.03.2025ல் கண்டுள்ள திருவாரூர் நகராட்சி ஆணையரின் 29.04.2024 தேதிய கடிதத்தில் கோரிக்கை ஏற்கப்பட்டது எனவும், மார்ச் 2025–க்குள் பணப்பலன்கள் வழங்கப்படும் எனவும், 28.03.2025ம் தேதிய கடிதத்தில் 30.06.2025க்குள் பணப்பலன்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் பதிலுரையில் கண்டுள்ளபடி எதுவும் நடக்கவில்லை.

எனவே, நான் திருவாரூர் நகராட்சி ஆணையருக்கு என்னால் எழுதப்பட்ட கோரிக்கை கடிதம் நாள் 16.06.2025–ல் கண்டுள்ளபடி தாங்கள் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு உறுதி அளித்தபடி 30.06.2025–க்குள் பணப் பலன்களை எனது வங்கி கணக்கில் வரவு வைக்க வேண்டி, கணக்கு எண் உள்ளிட்ட விவரங்களை அனுப்பி கடிதம் சமர்ப்பித்திருந்தேன். இதற்கு திருவாரூர் நகராட்சி ஆணையரிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கப் பெறவில்லை.

முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு தொலைபேசி எண்.1100 வாயிலாக தொடர்பு கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவகளுக்கு அனுப்பப்பட்ட தனிப்பிரிவு மனு எண்.TN MAWS/ TVR1CM CELL/26 JUNE 2025/12070853 மற்றும் 23.01.2025ல் தனிப்பிரிவிற்கு என்னால் அனுப்பப்பட்ட கோரிக்கை கடிதத்தில் கண்ட எனது மனு குறித்து தகவல் கோரினேன். (இக்கோரிக்கை குறித்து திருவாரூர் நகராட்சி அலுவலகத்திலிருந்து எவ்வித எழுத்துப்பூர்வமான பதிலும் கிடைக்கவில்லை). மேற்படி எனது மனுவிற்கு தனியரின் பணிப்பதிவேடு, மணப்பாறை நகராட்சியில் உள்ளது எனவும், கிடைக்கப்பெற்றவுடன் பணப்பலன்கள் கணக்கிட்டு வழங்கப்படும் எனவும் பதிலுறையில் தெரிவித்து மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது என திருவாரூர் நகராட்சி ஆணையரால் பதில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் அளித்தனர். ஆனால் மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னதாகவே Duty Pay மற்றும் Leave Salary இரண்டிற்கும் சேர்த்து சுமார் ரூ.6.50 லட்சத்திற்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு எவ்வித மேல் நடவடிக்கையும் இல்லாமல் நிலுவையில் உள்ளதென்பதை அலுவலக நண்பர்கள் வாயிலாக நான் அறிந்தேன்.

இந்நிலையில், கணக்கீட்டு பணிகள் ஏற்கனவே முடிந்த நிலையில், காலம் கடத்தும் நோக்கில் இப்பொருள் தொடர்பாக துவாகுடி நகராட்சி ஆணையருக்கு திருவாரூர் நகராட்சி ஆணையர் கடிதம் எழுதி (கணக்கீடு செய்ய) பணிப்பதிவேட்டினை (SR) கோரியிருந்தார். துவாகுடி நகராட்சி ஆணையர் அவர்களின் திருவாரூர் நகராட்சி ஆணையருக்கு முகவரியிடப்பட்ட கடித ந.க.எண்.587/2023/சி1 நாள் 25.08.2025–ல் கண்டுள்ள கடிதம் வாயிலாக பணிப்பதிவேடு திருவாரூர் நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுநாள்வரை (01.11.2025) கணக்கீடு செய்த தொகை தொடர்பாகவோ, பணப்பலன்கள் வழங்கப்படுவது குறித்தோ எவ்வித தகவலும் கிடைக்கப்பெறாமல் மிகவும் மன உளைச்சலில் உள்ளேன். பணிப்பதிவேடும் தேவையில்லாமல் திருவாரூர் நகராட்சியில் உள்ளதாக அறிகிறேன். இதனால் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்கத்திற்கு துவாகுடி நகராட்சியிலிருந்து மறு முன்மொழிவுகள் அனுப்ப மீண்டுமொருமுறை கால தாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஓய்வு பெற்ற ஊழியர்களின் மீதான பற்று பாசத்தின் அடிப்படையில் முன்னுரிமையின் அடிப்படையில் ஓய்வூதியர்களுக்கு நிதி ஆதாரத்தினை வழங்க வேண்டும் என தெரிவித்துள்ள நிலையிலும், இதுநாள் வரையில் எனது வாழ்வாதாரத்திற்கு பணப்பலன்கள் வழங்கப்படாமல் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் காலம் கடத்தும் திருவாரூர்

நகராட்சி ஆணையர் அவர்களுக்கு உரிய உத்தரவுகள் பிறப்பித்து, எனது நீண்ட நாள் குறையினை தீர்த்து வைக்க வேண்டுமென மன்றாடிவேண்டிகேட்டுக்கொள்கிறேன்.''

2. மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருவாரூர் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. திருவாரூர் நகராட்சி ஆணையரால் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

4. இந்நிலையில், எதிர்மனுதாரரான திருவாரூர் நகராட்சி ஆணையரின் 27.02.2026 நாளிட்ட கடிதம் ந.க.எண்.229/2024/சி2–ஐ இம்முறைமன்ற நடுவத்தில் 03.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையின் போது, விசாரணைக்கு ஆஜரான திருவாரூர் நகராட்சி இளநிலை உதவியாளரால் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் –

“திருவாரூர் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது துவாக்குடி நகராட்சியிலிருந்து 31.07.2022ல் விருப்ப ஓய்வு பெற்ற திரு ச. கலியமூர்த்தி என்பவர் திருவாரூர் நகராட்சியில் பணிபுரிந்த காலத்தில் வெவ்வேறு காலங்கட்டங்களில் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டும், அடிக்கடி தன்னிச்சையாக பணிக்கு வராமலும், இருந்துள்ள நிலையில் 10.02.2020 அன்று பிற்பகல் முதல் திருவாரூர் நகராட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டு துவாக்குடி நகராட்சியில் பணிபுரிந்துள்ளார். இந்நிலையில் இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.10962/2014/சி1 நாள் 01.12.2020ல் இவரது தற்காலிக பணிநீக்க நாட்கள், பணிக்கு வராத நாட்கள், ஆகிய 341 நாட்கள் ஈட்டிய விடுப்பு மற்றும் தனிப்பட்ட காரணங்களாக ஈட்டா விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பாக பாவித்து உத்தரவிடப்பட்டு ஊதிய நிலுவை பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. தனியர் இந்நகராட்சி பணியிலிருந்து 10.02.2020 விடுவிக்கப்பட்ட பிறகு இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, தனியரின் பணிப்பதிவேட்டை ஆய்வு செய்து நிலுவைத் தொகை வழங்க ஏதுவாக 23.07.2025ல் துவாக்குடி நகராட்சிக்கு கடிதம் அனுப்பியதை தொடர்ந்து 03.09.2025 அன்று பணிப்பதிவேடு திருவாரூர் நகராட்சியில் பெறப்பட்டது. தனியரின் பணிப்பதிவேட்டை ஆய்வு செய்யப்பட்டதில் ஈட்டிய விடுப்பு கணக்குகள் சரியான வகையில் கணக்கீடு செய்யப்படாததால், இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.10962/2014/சி1, நாள் 01.12.2020–ல் கண்டுள்ள செயல்முறை உத்தரவு ரத்து செய்யப்பட்டு, திருவாரூர் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.229/2024/சி1, நாள் 18.02.2026–ல் கண்டுள்ளவாறு பணிக்கு வராத காலம் / தற்காலிக பணி நீக்க காலம் திருத்தியமைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. விடுப்பு காலம் திருத்தியமைக்கப்பட்டதன்படி தனியருக்கு 329 நாட்களுக்கான ஊதிய நிலுவை பெறவும் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திருவாரூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 03.03.2026 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 17.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 03.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“எனக்கு 2020–ல் Duty pay மற்றும் Leave salary வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து வந்தது. 31.07.2022–ல் நான் எனது உடல் உபாதை மற்றும் சொந்த காரணங்களுக்காக தன்விருப்ப ஓய்வு பெற்று விட்டேன்.

இன்றைய விசாரணையின்போது மேற்கண்ட நிலுவைக்கான தொகை ரூ.5,97,301/– (ரூபாய் ஐந்து லட்சத்து தொன்னூற்றி ஏழாயிரத்து முன்னூற்றி ஒன்று மட்டும்) இந்தியன் வங்கி காசோலை எண்.519915, 02.03.2026 நாளிடப்பட்டது எனக்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நான் முறையிட்ட பின்னர்தான் எனக்கு மேற்படி தொகை வழங்கப்பட்டுள்ளதால் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்."

7. எதிர்மனுதாரரான திருவாரூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண். 229/2024/சி2, நாள் 02.03.2026–ல் திருவாரூர் நகராட்சி ஆணையர், மன்னார்குடி நகராட்சி ஆணையராக கூடுதல் பொறுப்பு வகித்து வருவதால், 03.03.2026 அன்று மன்னார்குடி நகராட்சியில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தலைமையில் பாலங்கள் மற்றும் கட்டிடங்கள் திறப்பு விழா நடைபெறவுள்ளதால், 03.03.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு திருவாரூர் நகராட்சி இளநிலை உதவியாளர் திரு. செந்தில்குமார் என்பவர் ஆஜராக அனுமதி வழங்கிட கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, திருவாரூர் நகராட்சி இளநிலை உதவியாளர் திரு. செந்தில்குமார் என்பவர் 03.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரரின் புகார் மனு மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 02.03.2026 அன்று Duty pay மற்றும் Leave salary ஆகியவற்றிற்கான கணக்குகளை சரிபார்த்து, மனுதாரருக்கு ரூ.5,97,301/– (ரூபாய் ஐந்து லட்சத்து தொன்னூற்றி ஏழாயிரத்து முன்னூற்றி ஒன்று மட்டும்) இந்தியன் வங்கி காசோலை எண்.519915 நாள் 02.03.2026 மூலம் வழங்கப்பட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுவிட்டது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.".

8. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான திருவாரூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, திருவாரூர் நகராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மன்னார்குடி நகராட்சியில் தினக்கூலி பணியாளராக பணியாற்றிய மனுதாரர் அரசாணையின்படி நகரமைப்பு ஆய்வராக பணியமர்த்தப்பட்டு, பல்வேறு நகராட்சிகளில் பணிபுரிந்துள்ளார் என்பதும், பணி காலங்களில் பணிக்கு சரிவர வராததால், அவ்வப்போது தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு, பின்னர் பணியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதும், உடல் உபாதை மற்றும் சொந்த காரணங்களால் தன்விருப்ப ஓய்வு பெற்றுள்ளார் என்பதும், ஆணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் மனுதாரருக்கு Duty pay மற்றும் Leave salary வழங்கப்படவில்லை என்பதும், இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனு தாக்கல் செய்ததைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணையின்போது மனுதாரருக்கு நிலுவைத் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது என்பதும், நிலுவைத் தொகை பெற்று தந்த மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு மனுதாரர் தனது நன்றியை தெரிவித்திருப்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

திருவாரூர் நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த மனுதாரர் 31.07.2022ல் துவாக்குடி நகராட்சியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றள்ளார் என்பதும், திருவாரூர் நகராட்சியில் பணிபுரிந்த காலத்தில் இடையில் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதால், மனுதாரரின் பணிப்பதிவேடு ஆய்வு செய்யப்பட்டு மனுதாரர் பணிக்கு வராத காலங்கள் மற்றும் தற்காலிக பணிநீக்க காலம் திருத்தியமைத்து உத்திரவிட்ட பின்னர் மனுதாரருக்கு 329 நாட்களுக்கு ஊதியம் மற்றும் இதரபடிகள் வழங்கிட அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது என்பதும், மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய Duty pay and Leave salary நிலுவைத் தொகை ரூ.5,97,301/–க்கான காசோலை வழங்கப்பட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரரான திருவாரூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் திருவாரூர் நகராட்சி இளநிலை உதவியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், எதிர்மனுதாரரான திருவாரூர் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட மனுதாரரின் Duty pay and Leave Salary நிலுவைத் தொகை ரூ.5,97,301/–க்கான காசோலை நகராட்சி ஆணையரின் சார்பில் விசாரணைக்கு ஆஜரான திருவாரூர் நகராட்சி இளநிலை உதவியாளரால் மனுதாரருக்கு வழங்கப்பட்டு, மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதால், முறையீட்டு மனுதாரரின் புகார் மனுமீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 30–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. ச. கலியமூர்த்தி,
   த/பெ. திரு. பி. சந்தர்ராஜ்,
   நகரமைப்பு ஆய்வர்(விருப்ப ஓய்வு),
   எண்.16/14, நடராஜன் கீழத் தெரு,
   புதுப்பாலம், மன்னார்குடி – 614 001,
   திருவாரூர் மாவட்டம்.
   கைபேசி – 89405 00995

2. நகராட்சி ஆணையர்,
   திருவாரூர் நகராட்சி,
   திருவாரூர் மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

2/4/26
செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032